**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண் 1900 /ஆ4/2026 நாள் 31.08.2026**

பொருள் : தேர்வுகள்–வேலூர் மாவட்டம் –10 –ம் வகுப்பு மாணவர்களுக்கு சிறு தேர்வு (Slip Test –4) – 01.09.2026 முதல் நடைபெறுதல் மற்றும் சிறு தேர்வுகளுக்கான பாடத்திட்டம் பள்ளிகளுக்கு தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை : வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். **1900 /ஆ4/2026 நாள் 05.08.2026**

==========

அனைத்து வகை அரசு உயர்/மேல்நிலை/அரசு நிதியுதவி பள்ளிகளில் பயிலும் 10,12ம் வகுப்பு மாணவர்களுக்கு சிறு தேர்வுகள் ( slip Test–1 ) 10.08.2026 முதல் நடைபெற்றுவருவதை தொடர்ந்து பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கான **சிறு தேர்வுகள் –4 ( slip Test–4) 01.09.2026** முதல் நடைபெறவுள்ளது.

எனவே பத்தாம் வகுப்பு சிறு தேர்வு –4 –க்கான அட்டவணையை அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் தங்கள் பள்ளி ஆசிரியர்கள் வாயிலாக அனைத்து மாணவர்கள் / பெற்றோர்கள் அறியும் வகையில் அறிவிப்பு பலகையில் ஒட்டியும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சிறு தேர்வு–4–க்கான வினாக்கள் Edwise Vellore–>data –ல் பதிவிறக்கம் செய்துகொள்ள தெரிவிக்கப்படுகிறது.

- மேலும் Slip Test நடைபெற்று முடிந்த மறுதினமே ஆசிரியர்கள் விடைத்தாள் திருத்தம் செய்து மாணவர்களுக்கு வழங்கப்படுவதை தலைமை ஆசிரியர்கள் உறுதிசெய்திட வேண்டும்.

- இதுவரை நடைபெற்ற சிறு தேர்வில் மாணவர்கள் தேர்ச்சி விவரங்களை இத்துடன் இணைப்பில் காணும்ம் https://docs.google.com/spreadsheets/d/1nXI4QE5_3cDkeKucdar8_g0Gd5yidSMMO9OBiaKIf8c/edit?usp=sharing Google Sheet –ல் சிறு தேர்வுகள் முடிவுற்ற அன்றைய தினமே தலைமை ஆசிரியர்கள் மறுநினைவூட்டிற்கு இடமளிக்காமல் பதிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

- சிறுதேர்வு நடத்தப்படுவது மாணவர்கள் படிப்பில் ஆர்வத்துடன் கவனம் செலுத்துவதற்கும், மாணவ/மாணவிகள் முயற்சியினை கைவிடாமல் பொதுத்தேர்வினை எளிதாக அணுகிட ஏதுவாக அமைவதற்கு வாய்ப்பாக அமையும் என்பதனை கருத்தில் கொண்டு ஆசிரியர்கள் சிறுதேர்வினை நடத்திட வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு:

1. Slip Test Syllabus அட்டவணை
2. Slip test –4 Time table
3. Google sheet link

//ஓம்.//
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

பெறுநர்:

அனைத்து வகை (அரசு/நகரவை /ஆதிதிராவிட நலம்/ நிதியுதவி/ மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்கள் வேலூர் மாவட்டம்.

நகல்:

- மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் தெரிவிக்கலாகிறது.
- மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள் /தொடக்கக்கல்வி) அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
- வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிவுடன் அனுப்பிவைக்கப்படுகிறது .